## மகத்தான ‘நான் முதல்வன்’!

# மலிவான முதல்வர் விஜய் அரசு!

இந்திய மாநிலங்களில் இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி கொண்ட ஒரே மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்தியது திராவிட மாடல் ஆட்சி. அதில் தொழில்துறை முதலீடுகளுக்கு மிக முக்கிய பங்கு உண்டு. பன்னாட்டு நிறுவனங்களின் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் ஒரே இடத்தில் குவிக்காமல், பரவலான அளவிலும் அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற வகையிலும் தொடங்கச் செய்து அங்குள்ள இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்பினைத் திராவிட மாடல் அரசு உருவாக்கித் தந்தது. இதில் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

வியட்நாமில் உள்ள உலகப் புகழ்பெற்ற வின்ஃபாஸ்ட் மின்கல வாகனங்கள் உற்பத்தி நிறுவனம் திராவிட மாடல் அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதன் விளைவாக, தூத்துக்குடியில் தனது தொழிற்சாலையை நிறுவிய போது, அந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான தொழில்நுட்பத் திறன் கொண்ட பணியாளர்களை தூத்துக்குடி மாவட்டத்திலேயே தேர்வு செய்ய வேண்டும் என திராவிட மாடல் அரசு வலியுறுத்தியது. அத்துடன், ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பாலிடெக்னிக்கை சேர்ந்த 300 மாணவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதில் 200 ஆண் – பெண் மாணவர்களை வின்ஃபாஸ்ட் நிறுவனம் தனது பணியாளர்களாகத் தேர்ந்தெடுத்தது. இவர்களில் 105 பேர் அரசு பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் என்பது சிறப்பாகும்.



**கோவி.லெனின்**
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

தூத்துக்குடியில் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடங்கப்பட்ட பன்னாட்டு நிறுவனங்களில், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு, பணிக்குச் சேர்ந்த இளைய தலைமுறையினர் 45 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களாகும். அதிக ஊதியம் பெறக்கூடிய வேலைகளில் தமிழ்நாட்டு இளைய தலைமுறைக்குப் பெரும் வாய்ப்பை உருவாக்கித் தந்தது நான் முதல்வன் திட்டம். ஜப்பான் உள்ளிட்ட வெளிநாடுகளில் தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள், மென்பொருள் பணியாளர்களுக்கு அந்தந்த நாட்டு மொழிகளுடன் கூடிய திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, பலரும் பணிக்குச் சேர்ந்துள்ளனர்.

ஒன்றிய அரசின் யு.பி.எஸ்.சி. தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குப் பயிற்சியுடன் 10 மாதங்களுக்கான உதவித் தொகையாக 7,500 ரூபாயும் வழங்கி அவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறத் துணை நின்றது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டை உயர்த்திய திராவிட மாடல் அரசு. 1000 மாணவர்கள் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு, இந்திய அளவில் நல்ல ‘ரேங்க்’ பெற்று, வரலாற்றுச் சாதனைப் படைத்தனர்.

விஜய் தலைமையிலான அரசு அமைந்தபிறகு, நான் முதல்வன் திட்டத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டு, அதன் பெயரை மாற்றியிருப்பதுடன், அரசின் அதிகாரப்பூர்வ இணையதளம் மற்றும் சமூக வலை தளங்களில் நான் முதல்வன் திட்டம் குறித்தும் அதன் பயனாளிகள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் பதிவிடப்பட்டிருந்த காணொலிகளும் நீக்கப்பட்டுள்ளன. யு.பி.எஸ்.சி. தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான உதவித் தொகையும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது.

‘நான் முதல்வன்’ திட்டத்தின் பெயரை, ‘திறன் தமிழ்நாடு’ என்று மாற்ற வேண்டிய தேவை என்ன என்று விஜய் அரசில் அமைச்சராக உள்ள நிர்மல்குமாரிடம் ஊடகத்தினர் கேட்டபோது, “அந்தப் பெயரைப் பார்த்தால், தமிழ்நாட்டின் முதல்வராவதற்கு பயிற்சி அளிப்பது போன்ற குழப்பம் ஏற்படுகிறது. அதனால்தான், அதன் பெயர் மாற்றப் பட்டுள்ளது” என்று விநோதமான விளக்கத்தை அளித்துள்ளார்.

கழகத் தலைவர் அவர்கள் 2021ல் தன்னை முதல்வராக்கிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திலும், திறன் மிகுந்த சாதனையாளர்களாவும், தங்கள் துறையில் முதல்வராகவும் ஒருவர் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தில் 2022ஆம் ஆண்டில் நான் முதல்வன் எனும் மகத்தானத் திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால், மலிவான சிந்தனை கொண்ட விஜய் ஆட்சியில், இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக, ‘நான் முதல்வன்’ திட்டத்தை சீரழிக்கும் வேலைகள் தொடங்கியுள்ளன. பெயர் மாற்றம், உதவித் தொகை நிறுத்தம் எனத் தொடரும் போக்குகளால், இளைய தலைமுறையின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

கல்விக் கூடங்களில் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதிலோ, படித்துப் பட்டம் பெறுபவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதிலோ அக்கறை இல்லாமல், பள்ளிக்கூடங்களில் புகுந்து விசிலடிக்கும் திறமையை வளர்க்கும் வேலையை செய்தால் போதும் என இந்த அரசு முடிவெடுத்து விட்டதா?

# அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்குகளுக்குக் கட்டண உயர்வு கூடாது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 28-

அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்குகளுக்குக் கட்டண உயர்வு கூடாது! கருத்துச் சுதந்திரம் மிக்கவையாக அனைத்து நூலகக் கூட்ட அரங்குகளும் செயல்பட வேண்டும்! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:



**புத்தகங்கள் அறிவின் திறவுகோல்கள்!**

2006-2011 இல் முத்தமிழறிஞர் கலைஞர் அரசு உருவாக்கிய அறிவு அடையாளங்களுள் ஒன்று சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள “அண்ணா நூற்றாண்டு நூலகம்”. அதனை, அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சி முடக்கி மடைமாற்ற நினைத்த போது, தமிழ்ச் சமூகம் அறச் சீற்றத்துடன் எழுந்து, அதைத் தடுத்து நிறுத்தியது. கடந்த தி.மு.க. ஆட்சியில் மீண்டும் பொலிவு பெற்று ஏராளமான மாணவர்களும், கல்வியாளர்களும், இளைஞர்களும் பயன்பெறும் இடமாக அது அமைந்தது. மாதிரி நூலகம் போன்றும், தரநிலை அளவுகோல் (Bench Mark) போன்றும் அந் நூலகம் அமைந்து விட்டது.

நூலகம் என்பதன் முழுப் பயன்பாட்டைப் பெறும் வகையில், சிறு புத்தக வெளியீட்டு அரங்கு, மாநாட்டு அரங்கு, பெருங் கூட்டங்களுக்கு வசதி யான கலை அரங்கு என்று பலவகை அரங்குகள் அங்கு உருவாக்கப்பட்டன. அவற்றில் சிறு புத்தக வெளியீட்டு அரங்கு என்பது இலக்கியக் கூட்ட ங்கள், சிறிய அளவில் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள் நடத்துவதற்குமான அரங்கமாகப் பயன்பட்டு வந்தது. அதற்கு ரூ.3000 என்று மிகக் குறைந்த தொகையைக் கட்டணமாக நிர்ணயித்து ஊக்குவித்து வந்த நிலையில், வரும் ஜூலை முதல் அதன் கட்டணம் ரூ.14,750 என்று நான்கு மடங்கு உயர்த்தப்பட்டும், கலையரங்கத்தின் வாடகை ரூ.3 லட்சம் என்பதிலிருந்து, ரூ.5 லட்சமாக உயர்த்தப்படுவதாக வந்துள்ள செய்தி கண்டனத்திற்குரியதாகும்.

**கட்டண உயர்வை தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும்!**

நூலகங்கள் போன்ற அறிவுக் கூடங்கள் வருமானத்திற்கானவை அல்ல. அவற்றுக்குச் செய்யப்படும் செலவு - கலை, பண்பாட்டு, அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுபவை யாகும். எளிய பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், புதிய படைப்பாளிகளுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்த இந்த நிகழ்ச்சி அரங்கிற்கு அறிவிக்கப்பட்டுள்ள கட்டண உயர்வைத் தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும். பழைய கட்டண விகிதமே உறுதிசெய்யப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

அண்ணா நூற்றாண்டு நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம் உள்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள நூலகக் கூட்ட அரங்குகளில் அரசியல் மாற்றுக் கருத்துகளுக்கும், கருத்து மாறுபாடு உடையோருக்கும் அனுமதி மறுக்காமல், எல்லோருக்குமான கருத்துச் சுதந்திரக் களங்களாகவும் அவை அமைய வேண்டும் என்பதையும் இச்சூழலில் நினைவுபடுத்தி, வலியுறுத்த விரும்புகிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து, அயோத்தி ராமர் கோவிலுக்கென வழங்கப்பட்ட நன்கொடைகளில் பெரிய அளவில் முறைகேடுகள் நடந்ததால், எட்டு பேர் கைது, இருவர் ராஜினாமா என்றெல்லாம் செய்திகள் வருகின்றனவே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; ராமர் கோவிலுக்கான நன்கொடைப் பணத்தைப் பெருமளவில் ‘கோவிந்தா’ போட்டவர்களை நினைக்கும் போது, ‘அட, ராமா ராமா’ என்று உண்மையான பக்தர்கள் தலையில்தான் அடித்துக்கொள்ள வேண்டும்!**

## மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய தி.மு.க. செயலாளர் இல. பவுணனின் 28 ஆம் ஆண்டுநினைவு தினம்!

# இலவச கண் சிகிச்சை முகாம் - 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கல்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்! கண்மணி நெடுஞ்செழியன் தலைமை!

செஞ்சி, ஜூன் 28-

விழுப்புரம் வடக்கு மாவட்டம்மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய திமுக கழக செயலாளர் இல பவுணன் அவர்களின் 28 ஆம் ஆண்டு நினைவு தினம்வளத்தி ஊராட்சியில் உள்ள கலைஞர் திருமண மண்டபத்தில் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்குமேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். பூங்காவனம் பவுணன், இளங்கோ லட்சுமி, இராவணன் தமிழரசி ,ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஒன்றிய திமுக செயலாளர் இல. பவுணன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து மறைந்த இல. பவுணன் நினைவு அறக்கட்டளை சார்பில்நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமினை தொடங்கி வைத்த அவர் மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அரசு பள்ளியில் 10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களில் பிடித்த 100 மாணவ மாணவிகளை பாராட்டி சான்றிதழ்களையும், கேடயங்களை மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கி 1000நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

சென்னை வண்டலூர் தாகூர் மருத்துவக் கல்லூரி கண் மருத்துவர் டாக்டர் மனுஸ்ரீ தலைமையிலான மருத்துவர்கள் கலந்து கொண்டு கண் சம்மந்தமானபல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர்

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முகிலீஸ்வர் நன்றி கூறினார்.






விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய தி.மு.க. செயலாளர் இல. பவுணனின் 28ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வளத்தி ஊராட்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திரு உருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை தொடங்கி வைத்த அவர் மேல்மலையனூர் ஒன்றியத்தில் 10, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவ – மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

# மதுரை மாவட்டத்தில் தொடர் கொலைகள் - பாலியல் தொல்லைகள்!

மதுரை, ஜூன் 28–

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியைச் சேர்ந்தவர் பால்பாண்டி வயது(26) இவரும் உசிலம்பட்டி நகராட்சி மன்ற துணைத் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகியுமான தேன்மொழி சுந்தரமூர்த்தியின் மகன் கவிக்குமார் வயது(23), கேசவன் வயது(23), கிஷோர் வயது(23) ஆகிய மூவரும் நண்பர்கள் ஆவார்கள்.

இவர்கள் மது குடித்துவிட்டும், போதை பொருட்களை பயன்படுத்தியும் நாள்தோறும் சுற்றி திரிவதாக கூறப்படுகிறது ஏற்கனவே இவர்களுக்குள் முன் விரோதம் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது

இந்நிலையில் பால்பாண்டியை தனிமையில் உசிலம்பட்டி ரயில்வே ஸ்டேஷன் பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கு ஏற்பட்ட தகராறில் கல்லைப் போட்டு கொலை செய்து விட்டு மூவரும் தப்பி ஓடி விட்டார்கள்.

இது குறித்து உசிலம்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து காங்கிரஸ் பிரமுகர் மகன் உட்பட மூன்று பேரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

இதே போல் மதுரை மாவட்டம் மேலூர் அருகில் உள்ள கயிலம்பட்டியைச் சேர்ந்த டிரைவர் நல்லுச்சாமி வயது (55). இவருக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ள நிலையில் சம்பவத்தன்று வீட்டின் முன்பு உறவினர்களுடன் நல்லுச்சாமி பேசிக் கொண்டிருந்த போது திடீரென அங்கு வந்த அடையாளம் தெரியாத ஒரு மர்ம கும்பல் நல்லுச்சாமியை சரமாரியாக வெட்டி சாய்த்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடி விட்டார்கள், இதில் சம்பவ இடத்திலேயே நல்லுச்சாமி ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தார். இதுகுறித்து மேலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

இதனிடையே மதுரை நகரில் உள்ள ஒரு பகுதியில் வசிப்பவர் ஆட்டோ டிரைவர் அமீர் வயது(52), இவர் தனது ஆட்டோவில் நாள்தோறும் பள்ளிக் குழந்தைகளை அழைத்துச் செல்வது வழக்கம்.

இந்நிலையில் ஆட்டோவில் அழைத்து சென்ற 6வயது சிறுமிக்கு தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இதுகுறித்து சிறுமி தன் பெற்றோர்களிடம் கூறியதை தொடர்ந்து அவர்கள் அண்ணா நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரை தொடர்ந்து டிரைவர் அமீரை மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

